Pw 3.3

## சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நிலமாற்றம் – தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான 0.32.5 ஹெக்டேர் (82 சென்ட்) நிலத்தில் 60 சென்ட் (26136 சதுர அடி) நிலம் குரும்பூர் காவல் நிலையம் கட்டுவதற்கு தூத்துக்குடி காவல் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.4)துறை**

அரசாணை (நிலை)எண்.83 40526 நாள் 16.07.2021
பிலவ வருடம், ஆனி 32,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், கடிதம் ந.க.எண்.ஊநி7/ 2771/2013, நாள் 31.12.2013 மற்றும் 16.10.2014.
2. காவல் கண்காணிப்பாளர் ந.க.எண்.எம்.1/1744/2013, நாள் 17.03.2014.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15, கடிதம் ந.க.எண்.2719/2014/ஊராட்சி 3.3, நாள் 15.11.2014 மற்றும் 06.03.2017.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–600 005 கடித எண்.வி2/ 22399/2017, நாள் 27.12.2018 மற்றும் 06.01.2019.
5. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15, ந.க.எண்.2719/2014/ஊராட்சி 3.3, நாள் 10.03.2021.

Put up
[illegible]
/8/2021

-----

**ஆணை:**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.512, நாள் 13.08.2014–ன்படியும், தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான அங்கமங்கலம் கிராமம். சர்வே எண்.240/2–ல் உள்ள 0.32.5 ஹெக்டேர் (82 சென்ட்) நிலத்தில் 60 சென்ட் (26136 சதுர அடி) நிலத்தை குரும்பூரில் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு கட்டணமின்றி இலவசமாக தூத்துக்குடி காவல் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய கோரிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையரின் குறிப்பின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேற்படி நிலமாற்றம் தொடர்பான கருத்துருவிற்கு ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றிய தீர்மானம் எண்.68, நாள் 14.12.2016–ல் இசைவளித்துள்ளது என்றும் நிலமாற்றம் கோரும் 20 சென்ட் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ.20,23,408/– எனவும், மாவட்ட ஆட்சியர் மேற்படி கிராமத்தில் வேறு அரசு துறை நிலங்கள் இல்லாத நிலையிலும் காவல் நிலையம் கிராமத்தின் மையப்பகுதியில் சொந்த நிலத்தில் அமைய வேண்டும் என்று அரசு அறிவுறுத்தி வருவதை கருத்தில் கொண்டும்

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான அங்கமங்கலம் கிராமம், சர்வே எண்.240/2–ல் உள்ள 20 செண்ட் நிலத்தினை மட்டும் தூத்துக்குடி மாவட்டம், குரும்பூர் காவல் நிலையம் கட்டுவதற்கு காவல் துறைக்கு நிலம் மாற்றம் செய்திட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று உள்ளார்.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் காவல் நிலையமானது வணி நோக்கத்திற்காக கட்டப்படாததாலும் மேற்படி நிலத்தில் வேறு அரசு துறைகள் இல்லாத நிலையிலும் காவல் நிலையம் கிராமத்தின் மையத்தில் அமைய வேண்டும் என்று அரசு அறிவுறுத்தி வருவதை கருத்தில் கொண்டும் தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான அங்கமங்கலம் கிராமம், குரும்பூரில் சர்வே எண்.240/2ல் உள்ள 0.32.5 ஹெக்டேர் (82 செண்ட்) நிலத்தில் 20 செண்ட் நிலத்தினை காவல் நிலையம் கட்டுவதற்கு காவல்துறைக்கு கட்டணமின்றி இலவசமாக நிலமாற்றம் செய்திட பரிந்துரை செய்துள்ளார்.

4. அரசாணை எண்.209, ஊரக வளர்ச்சி(சி4) துறை, நாள் 17.08.2000 குறிப்பிட்டுள்ளபடி, ஊராட்சி ஒன்றிய கிராம ஊராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துக்களை பிற துறைகளுக்கு மாற்றம் செய்யும் பொழுது தமிழ்நாடு ஊராட்சி விதிகள் 2000 (நிலையான சொத்துக்களை மாற்றம் செய்தல் மற்றும் நிலமெடுப்பு) பிரிவு 5ல் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தின் மதிப்பு ரூ.50,000/–க்கு மேல் இருக்கும் பட்சத்தில் அனுமதி வழங்குவதற்கு முன்பு அதற்கான முன்மொழிவினை அரசுக்கு அனுப்பி முன் அனுமதி பெற்ற பின்னர் பிற துறைகளுக்கு மாற்றம் செய்யும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் மேற்காணும் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான அங்கமங்கலம் கிராமம், குரும்பூரில் சர்வே எண்.240/2ல் உள்ள 0.32.5 ஹெக்டேர் (82 செண்ட்) நிலத்தில் 20 செண்ட் நிலத்தினை காவல் நிலையம் கட்டுவதற்கு காவல்துறைக்கு கட்டணமின்றி இலவசமாக நிலமாற்றம் செய்ய தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களைக் கொண்டடைவு செய்தல், மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் விதி 5–ன்படி நடவடிக்கை எடுத்து நில உரிமை மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**K. கோபால்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
காவல் கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாவட்டம்.
காவல்துறை, தூத்துக்குடி மாவட்டம்
மாநில கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி மாவட்டம்

**நகல்**
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9
உள் (காவல்) துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.